WHEN QUALITY COMES FIRST,

THE REWARDS FOLLOW NATURALLY !

# பெண்கள் வீட்டில் தனியாக இருந்தால்....

**நீங்கள், கணவரை அலுவலகத்துக்கும், குழந்தைகளை பள்ளி, கல்லூரிக்கும் அனுப்பி விட்டு வீட்டில் தனியே இருப்பவரா...? அப்படியானால் இதை அவசியம் வாசியுங்கள்.**

**வீட்டில் தனியே இருக்க நேரும் பெண்களும், வயதானவர்களும்தான் வீடு புகுந்து மிரட்டும் கொள்ளையர்களுக்கு முதல் பலி ஆகிறார்கள்.**

**''சேல்ஸ் மேன் போல நடித்து வீட்டில் தனியாக இருந்த பெண்ணிடம் நகை கொள்ளை !''**

**'வீட்டில் தனியே இருந்த பெண் பணத்துக்காக கொலை !'**

**என்று தினசரிகளில் அடிக்கடி செய்திகள் பார்த்து கலங்குகிறோம். பின் வழக்கம்போல மறந்துவிடுகிறோம்.**

## அவசர நிலை

*இதுபோன்ற அசம்பாவிதங்களைத் தவிர்க்க, நாம் கவனமாக இருக்க வேண்டியது மிக அவசியம்.*

*அதற்கான சில டிப்ஸ்கள் இதோ...*

★ வீட்டுக்கு வரும் எல்லாருமே திருடர்கள் இல்லைதான். இருந்தாலும் காலிங்பெல் அடித்ததும், கதவின் மேல் பதிக்கப்பட்டிருக்கும் சிறிய கண்ணாடி துளை ( Magic Hole ) வழியாகவோ, ஜன்னல் வழியாகவோ பார்த்து, அறிமுகமானவர்தானா என்று தெரிந்து கொண்ட பிறகே கதவை திறக்க வேண்டும்.

★ ஜன்னல் வழியாகப் பார்க்கும்போது ஜன்னலுக்கு மிக அருகில் செல்ல வேண்டாம். கைவிட்டு நகை பறிக்கும் அல்லது கையைப் பிடித்து இழுத்து கதவைத் திறக்க சொல்லி அச்சுறுத்தும் ஆபத்தும் உள்ளது.

★ விபத்தில் சிக்கி கணவரோ குழந்தைகளோ ஆபத்தான நிலையில் இருப்பதாக வந்திருப்பவர் சொன்னால்கூட பதறாதீர்கள். அலுவலகத்துக்கோ பள்ளிக்கோ போன் செய்து உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். தகவல் உண்மையாக இருக்கும் பட்சத்தில் மட்டுமே செயலில் இறங்குங்கள்.

★ டெலிபோன் டிபார்ட்மெண்ட், கேஸ் ஏஜென்சி போன்ற துறைகளில் இருந்து வருவதாகச் சொன்னால், அடையாள அட்டையை காட்டச் சொல்லுங்கள். தகவல்களை சரிபார்த்து பிறகு மேற்கொண்டு பேசுங்கள்.

★ நீங்கள் கேள்வி கேட்பதை எதிர்த்து அவர் குரல் கொடுத்தால் இன்னும் சந்தேகப்பட்டு விசாரியுங்கள்.

★ தவறான எண்ணத்துடன் அவர் வந்திருந்தால், நீங்கள் தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் அவரை பயமுறுத்தும். கண்ணிலும் வார்த்தை பரபரப்பிலும் அது தெரியும்.

★ தன்னைப் பற்றிய தகவல்களை விசாரித்துக் கொள்ளச் சொல்லி அவர் கொடுக்கும் தொலைபேசி எண்ணுக்கு உடனே போன் செய்து விடாதீர்கள். எதிர்முனையில் இருப்பவர் வந்திருக்கும் நபரின் கூட்டாளியாக இருக்கலாம். டெலிபோன் டைரக்டரியில் நம்பரையும் அந்த நம்பருக்குரியவர் பற்றியும் விசாரியுங்கள். தகவல்கள் சரியாக இருந்து, உங்களுக்கு நம்பிக்கை வந்தால் மட்டுமே கதவை திறங்கள்.

★ சந்தேகம் என்றால் வீட்டில் ஆளிருக்கும்போது வாருங்கள் என்று சொல்லி அனுப்பி விடுங்கள். போக மறுத்தால் போலீசுக்கு போன் செய்யுங்கள்.

★ அருகிலிருக்கும் காவல்நிலையத்தின் தொலைபேசி எண்ணை குறித்து வைத்துக் கொள்ளுங்கள்.

★ கையெழுத்து போட்டு குரியர் மற்றும் டெலிகிராம் வாங்குவதை ஜன்னல் வழியாகவே செய்யலாம்.

★ தனியாக இருக்கும் நேரங்களில் விலை உயர்ந்த ஆடை மற்றும் நகைகள் அணிவதை தவிர்த்து விடுங்கள்.

★ வந்திருப்பவர் தெரிந்தவராக இருந்தாலும் அரைகுறை ஆடையுடன் நின்று பேச வேண்டாம்.

★ ஏதேனும் பொருள் வாங்கிவிட்டு அதற்கான பணத்தை எடுக்க உள்ளே செல்லும்போது கதவை திறந்து வைத்துவிட்டு செல்லாதீர்கள்.

★ வெளியே சென்று வீட்டிற்கு வரும்போது பூட்டு உடைக்கப்பட்டு வீடு திறந்திருந்தால் எக்காரணம் கொண்டும் உள்ளே செல்லாதீர்கள். திருடர்கள் இன்னும் உள்ளேயே இருக்கும் வாய்ப்புள்ளது. அக்கம் பக்கத்தாரின் உதவியை நாடுங்கள். தாமதிக்காமல் போலீசுக்கு போன் செய்யுங்கள்.

★ திருடன் இருக்கும்போது தவறி நீங்கள் வீட்டிற்குள் சென்று விட்டாலோ அல்லது நீங்கள் வீட்டில் இருக்கும்போதே திருடன் உள்ளே நுழைந்துவிட்டாலோ கூச்சல் போட்டு உயிருக்கு ஆபத்து தேடிக் கொள்ளாதீர்கள். என்ன வேண்டும்? என்று நிதானமாகக் கேளுங்கள். பணத்தையும் நகையையும் காப்பாற்றுகிறேன் என்று அசட்டுத் துணிச்சலில் எந்த முயற்சியிலும் இறங்க வேண்டாம். திருடனின் கோபத்தை கிளப்ப வேண்டாம்.

★ அவன் வந்த காரியம் முடியும் வரை மூலையில் அமைதியாக உட்கார்ந்திருங்கள். அப்படி இருக்கும்போது திருடனின் தோற்றம், நடத்தை, பேச்சு, பேச்சில் தவறி விழும் அவனைப் பற்றிய விபரங்கள் என்று கூர்ந்து கவனியுங்கள். அவன் சென்றவுடன் தாமதிக்காமல் போலீசுக்கு போன் செய்யுங்கள்.

★ திருடன் நுழைந்திருப்பதை நீங்கள் உணர்ந்தால் சம்பந்தப்பட்ட அறைக்குள் போகாதீர்கள். நீங்கள் இருக்கும் அறையின் விளக்கைப் போட்டு சலசலவென்று சாமான்களை உருட்டுவது, கத்துவது என்று உள்ளிருந்தபடியே செயலில் இறங்குங்கள். உங்களை நேருக்கு நேர் சந்திப்பதைக் காட்டிலும் தப்பிச் செல்வதையே திருடர்கள் விரும்புவார்கள்.

★ பெட்ரூமில் போன் இருப்பதுதான் வசதி. தாமதிக்காமல் போலீசுக்கு போன் செய்யுங்கள். எந்த நிமிடத்திலும் திருடன் உங்களை எதிர் கொள்ளலாம் என்பதால் ஏதாவது ஒரு ஆயுதத்தை உடைக்குள் மறைத்து வைத்துக் கொள்ளுங்கள். திருடன் தாக்க வந்தால் அதை உபயோகியுங்கள்.

★ வீட்டில் ஒரிருவர் மட்டுமே இருந்தாலும் நிறையப் பேர் இருப்பது போல பாசாங்கு செய்து, அத்தனை பேரையும் பெருங்குரலிட்டு அழையுங்கள். நிறைய பேரை எதிர்கொள்ள எப்பேர்ப்பட்ட திருடனும் பயப்படுவான்.

★ உங்கள் செயல்களைக் கண்டு திருடன் ஓடிவிட்டாலும் அதோடு விட்டு விடாதீர்கள். சிலநாட்கள் கழித்து திருடன் திரும்பி வரும் வாய்ப்பு உள்ளது. ஜன்னல் வழியாகவோ, பால்கனி வழியாகவோ பார்த்து அவனுடைய அங்க அடையாளங்களைக் குறித்து வைத்து போலீசுக்குத் தகவல் கொடுங்கள்.

★ *திருடன் பற்றி போலீசுக்கு உதவிக்கூடிய சில முக்கிய தகவல்கள்...*

★ வயது, ஆணா, பெண்ணா, உயரம், எடை, நிறம், சுருட்டை முடி அல்லது சொட்டைத் தலை உடற்கட்டு, முகஅமைப்பு மற்றும் அதில் தெரியும் குறிப்பிடும்படியான தழும்பு, உதட்டமைப்பு, கண்களின் நிறம், கண்ணாடி அணிபவரா, அணிந்திருக்கும் உடை, வித்தியாசமான பேச்சு வழக்கு, மானரிசம், வாகனத்தில் வந்திருந்தால் அது எந்த வகையைச் சேர்ந்தது, நிறம் மற்றும் எண் முதற்கொண்ட தகவல்களை மனதிற்குள் குறித்து வைத்துக் கொள்ளுங்கள்.

★ எந்த வழியாக, எந்த திசையில் தப்பி ஓடினார் என்ற தகவலும் போலீசுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

☆ ☆ ☆

# FRIENDSHIP

# IS A BLESSING OF GOD

DON'T SAY YOU DON'T HAVE ENOUGH TIME. YOU HAVE THE SAME NUMBER OF HOURS PER DAY AS HELEN KELLER, MOTHER TERESA, ALBERT EINSTEIN AND PASTEUR

# நிழலின் அருமை...

பழங்காலத்தில் ஓரிடத்தில் ஒரு பெரிய ஆப்பிள் மரம் இருந்தது. ஒரு சின்னஞ்சிறுவன் அந்த மரத்தைச் சுற்றி நாள்தோறும் விளையாடிக் கொண்டிருந்தான். அவன் மெல்ல மரத்தில் ஏறி, பழங்களைப் பறித்து உண்பான்; அந்த மரத்தில் நிழலில் உறங்குவான்; அதனால், அவன் அந்த மரத்தை மிகவும் நேசித்தான். அந்த மரமும் தன்னிடம் வந்த சிறுவனை நேசித்தது.

காலம் சென்றது.. அந்தச் சிறுவன் வளர்ந்தான், அதனால் அடிக்கடி அந்த மரத்துடன் விளையாடுவதை மறந்தான்.

ஒருநாள் அச்சிறுவன் அந்த மரத்தை நோக்கி மிகவும் கவலையுடன் வந்தான். ''வா ! இங்கு வந்து என்னுடன் விளையாடு !'' என்றது மரம். ''நான் இப்போது சிறு குழந்தையல்ல; உன்னுடன் விளையாடுவதை விட, பொம்மைகளுடன் விளையாடுவதுதான் எனக்குப் பிடிக்கிறது! என்னிடம் பொம்மை வாங்கப் பணமில்லை ! '' என்றான் சிறுவன்.

''என்னிடமும் பணம் இல்லையே!'' என்று வருந்திய அந்தமரம், 'என் மேல் பழுத்துள்ள பழங்களை நீ பறித்துச் சென்று விற்றால், உனக்குப் பணம் கிடைக்கும்!' என்றது. அதனைக் கேட்டு எழுச்சி பெற்ற அச்சிறுவன், அந்த மரத்திலிருந்த எல்லாப் பழங்களையும் பறித்து எடுத்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் சென்றான். அவன் மீண்டும் அந்த மரத்தை நோக்கி வரவில்லை.

திடீரென்று ஒருநாள் தன்னை நோக்கி அச்சிறுவன் வருவதைக் கண்ட மரம் எழுச்சியுடன் ''வா ! என்னுடன் விளையாடு !'' என்று அழைத்தது.

''எனக்கு இப்போது உன்னுடன் விளையாட நேரமில்லை, நான் என் குடும்பத்தைக் காக்க உழைக்க வேண்டும்; எங்கள் குடும்பம் இருப்பதற்கு ஒரு வீடு வேண்டும்; மரமே, அதற்கு உதவுவாயா ?'' என்றான் சிறுவன். ''என்னிடம் ஏது வீடு?'' என்று வருந்திய அந்த மரம், வேண்டுமானால் என் கிளைகளை நீ வெட்டி, எடுத்துக் கொண்டு போய் உங்களுக்காக ஒரு வீடு கட்டிக் கொள்ளலாமே !'' என்றது. உடனே அவன் அந்த மரத்தின் எல்லாக் கிளைகளையும் வெட்டி எடுத்துக் கொண்டு, மகிழ்ச்சியுடன் சென்றான்.

சிறுவன் மகிழ்ச்சியுடன் செல்வதைப் பார்த்த மரம் இன்பமடைந்தது. பின்னர் அவன் பலவருடங்கள் அந்த மரத்தை நோக்கி வரவில்லை. அந்த மரம் தனியாக வருந்தி நின்றது.

ஒரு வெப்பம் மிகுந்த கோடைநாளில், அச்சிறுவன் மீண்டும் தன்னை நோக்கி வருவதைக் கண்ட மரம் எழுச்சி கொண்டது. ''வா, வா! என்னுடன் விளையாட வா !'' என்றது மரம். ''நான் பெரியவனாகி விட்டேனே !'' என்று வருத்தத்துடன் கூறிய அவன் 'நான் ஒரு படகில் ஏறிக் கடலில் சென்று நிம்மதி பெற விரும்புகிறேன் ! மரமே, எனக்கு ஒரு படகு வேண்டுமே ! தருவாயா? ' எனக் கேட்டான்.

‘‘ உனக்குத் தேவையான படகினைச் செய்து கொள்ள என் அடிமரம் பயன்படும். நீயும் அந்தப் படகில் ஏறி நீண்ட தூரம் செல்லலாம் ’’ என்றது – பாசம்மிக்க அந்தப் பழைய மரம்.

உடனே அவன் படகு செய்வதற்கேற்ற அளவில் அந்த அடிமரத்தை அறுத்து எடுத்துச் சென்றான். படகிலேறிக் கடலில் சென்ற அவன் பலவருடங்கள் அந்த மரத்தடிக்கு திரும்ப வரவில்லை.

பலமாதங்கள் கழித்து அவன் மீண்டும் அந்த மரத்தை நோக்கி வந்தான். அவனைக் கண்ட மரம் வருத்தப்பட்டது. ‘‘அருமை மகனே, உனக்குக் கொடுக்க என்னிடம் ஏதுமில்லை; இப்போது என்னிடம் பழங்களும் இல்லையே !’’ என்றது. ‘‘பழங்களைக் கடித்துத்தின்ன, என்னிடம் இப்போது பற்களும் இல்லை!’’ என்றான் அவன். ‘‘என்மேல் ஏறி விளையாட இப்போது என்னிடம் கிளைகளும் இல்லையே!’’ என்று மரம் பெருமூச்சு விட்டது. ‘‘ஏறி விளையாடும் இளமை மாறி, நானே இப்போது முதியவனாகி விட்டேன் ’’ என்றான் அவன்.

‘‘அடடா! இப்போது உனக்கு எப்படி உதவுவது?’’ என்று கேட்டமரம், ‘‘என்னடியில் இப்போது வீணான வேர்கள் மட்டுமே கிடக்கின்றன !’’ என்றது.

‘‘இத்தனை ஆண்டுகள் உழைத்துக் களைப்படைந்த எனக்கு, சாய்ந்து ஓய்வெடுக்க ஓரிடம் இருந்தால் போதும்; வேறெதுவும் வேண்டாம்’’ என்றான் வந்தவன்.

‘‘மிகவும் நல்லதாய்ப் போயிற்று! பழைய மரத்தின் பெரிய வேர்கள் சாய்ந்து ஓய்வெடுக்கத் தகுந்த பகுதிதான் ! வா, வந்து என் வேர்களிடையே சாய்ந்து ஓய்வெடு!’’ என்றது பாசம்மிக்க அப்பழைய மரம். அவன் வேரில் சாயந்து படுப்பதைக் கண்ட மரம், ஆனந்தக் கண்ணீர் விட்டது.

## இந்தக் கதை, நம் அனைவருக்குமே உரியது.

இந்த மரமே, நம் பெற்றோர்கள்; நாம் இளம்வயதில் தாய் தந்தையரை விட்டு விலகாமல் விளையாடுவதை விரும்பினோம்; நாம் வளர, வளர அவர்களை விட்டு விலகத் தொடங்கினோம்; நமக்கு ஏதாவது தேவை என்றால் – நாம் எப்போதாவது துன்பத்தில் சிக்கித் தவித்தால் மட்டுமே, பெற்றோரை நாடுகிறோம்.

பெற்றோர்கள் எப்போதும் நமக்குத் தேவையான அனைத்தையும் எப்படியாவது தந்து உதவி, நம்மை மகிழ்ச்சியடையச் செய்யத் தயாராக இருக்கிறார்கள். ஆனால், கதையில் வரும் சிறுவனைக் கொடியவன் என்று கருதும் நம்மில் பலர் நம் பெற்றோர்களிடம் அப்படித்தானே நடந்து கொள்கிறோம்!

ஆதலால்... தயவு செய்து, இனிமேலாவது பெற்றோர்களை நேசிப்போமே!

# CHILDREN ARE YOUR FUTURE - INVEST IN THEM

One day, an expert in time management was speaking to a group of business students, and to drive home a point he used an illustration those students will never forget. As he stood in front of the group of high-powered overachievers he said, "OKAY, time for a quiz." Then he pulled out a one gallon, wide mouthed Mason jar and set it on the table in front of him.

Then he produced about a dozen fist-sized rocks and carefully placed them, one at a time, into the jar. When the jar war filled to the top and no more rocks would fit inside, he asked, " Is the jar full ?" Everyone in the class said, "Yes." Then he said, "really?" He reached under the table and pulled out a bucket of gravel. Then he dumped some gravel in and shook the jar, causing pieces of gravel to work themselves down into the space between the big rocks. Then he asked the group once more, " Is the jar full?" By this time the class was on to him. " Probably not," one of them answered. "Good!" he replied.

He reached under the table and brought out a bucket of sand. He started dumping the sand in the jar and it went into all the spaces left between the rocks and the gravel. Once more he asked the question, " Is the jar full?" "No!" the class shouted. Once again he said, "Good!" Then he grabbed a pitcher of water and began to pour it in until the jar was filled to the brim. Then he looked at the class and asked, "What is the point of this illustration?" One eager student raised his hand and said, "The point is, no matter how full your schedule is, if you try really hard you can always fit some more thing in!"

"No," the speaker replied, "that's not the point. The truth this illustration teaches us is: If you don't put the big rocks in first, you'll never get them in at all. What are the 'BIG ROCKS' in your life ? Your children.... Your loved ones.... Your faith .... Your education.... Your dreams .... A worthy cause.... Teaching or mentoring others .... Doing things that you love.... Time for yourself .... Your health.... Your significant other."

"Remember to put these BIG ROCKS in first or you'll never get them in at all. If you sweat the little stuff ( the gravel, the sand ) then you'll fill your life with little things to worry about that don't really matter, and you'll never have the real quality time you need to spend on the big, important stuff ( the big rocks).

So, tonight or in the morning, when you are reflecting on this short story, ask yourself this question: what are the 'big rocks' in my life ? Then, put them in your jar first. Children and family are very important. While it is important to work on your business, you can never replace time spent with family, especially kids. Before long, they're all grown up and they may not have time to spend with you. Children are our future; invest in them well for the return on investment can be limitless.

# FAMILY VALUES

I ran into a stranger as he passed by,
"Oh, excuse me please" was my reply.
He said, "Please excuse me too; I wasn't watching for you."
We were very polite, this stranger and I.
We went on our way and we said good-bye.

But at home a different story is told,
How we treat our loved ones, young and old.
Later that day, cooking the evening meal,
My son stood beside me very still.
When I turned, I nearly knocked him down.
" Move out of the way, " I said with a frown.
He walked away, his little heart broken.
I didn't realize how harshly I'd spoken.

While I lay awake in bed,
God's still small voice came to me and said,
" While dealing with a stranger, common courtesy you use, but the children you love, you seem to abuse.
Go and look on the kitchen floor,
You'll find some flowers there by the door.
Those are the flowers he brought for you.
He picked them himself: pink, yellow and blue.
He stood very quietly not to spoil the surprise,
and you never saw the tears that filled his little eyes."

By this time, I felt very small,
And now my tears began to fall.
I quietly went and knelt by his bed;
" Wake up, little one, wake up," I said.
"Are these the flowers you picked for me?"
He smiled, " I found 'em, out by the tree. I picked 'em because they're pretty like you.
I knew you'd like 'em, especially the blue."

I said, "Son, I'm very sorry for the way I acted today;
I shouldn't have yelled at you that way."
He said, "Oh, Mom, that's okay. I love you anyway."
I said, "Son, I love you too, and I do like the flowers, especially the blue."

Are you aware that if we die tomorrow, the company that we are working for could easily replace us in a matter of days. But the family we left behind will feel the loss for the rest of their lives. And come to think of it, we pour ourselves more into work than to our own family.

So what is behind the story?

Do you know what the word FAMILY means ?

**FAMILY = (F)ATHER (A)ND (M)OTHER, (I) (L)OVE (Y)OU !**
Pass this on to everyone that you care about.

**A PESSIMIST SAYS**

THOUGH IT IS POSSIBLE, IT IS DIFFICULT

**AN OPTIMIST SAYS**

THOUGH IT IS DIFFICULT, IT IS POSSIBLE

# ONE TREE LESS MEANS

# NOTHING

ONE TREE LESS MEANS THAT MUCH LESS SHADE.

ONE TREE LESS MEANS THAT MUCH MORE SOIL ERODED.

ONE TREE LESS MEANS THAT MUCH LESS OXYGEN.

ONE TREE LESS MEANS THAT MUCH MORE POLLUTION.

ONE TREE LESS MEANS THAT MANY BIRDS WITHOUT NESTS, ANIMALS WITHOUT SHELTER.

ONE TREE LESS MEANS THAT MUCH LESS WATER, LESS FOOD.

ONE TREE LESS MEANS THAT MUCH MORE HEAT, MORE COLD.

ONE TREE LESS, ANOTHER TREE LESS, AND ANOTHER TREE LESS, MEANS NOTHING IN THE END.

## THINK BEFORE YOU CUT A TREE

## PLANT TREES !

" THE MORE YOU TEACH

THE MORE YOU LEARN..."

# FAM LY

I am nothing without my family.

COUNT YOUR BLESSINGS INSTEAD OF YOUR PROBLEMS

COUNT YOUR GAINS INSTEAD OF YOUR LOSES

COUNT YOUR JOYS INSTEAD OF YOUR WOES

COUNT YOUR FRIENDS INSTEAD OF YOUR FOES

COUNT YOUR SMILES INSTEAD OF YOUR TEARS

COUNT YOUR COURAGE INSTEAD OF YOUR FEARS

COUNT YOUR HEALTH INSTEAD OF YOUR WEALTH

COUNT YOUR GOD INSTEAD OF YOURSELF

"our biggest achievement is

your growing confidence."

INNOVATE

DON'T IMITATE

# ***Believe in Yourself !***

Set your standards high
You deserve the best
Try for what you want
And never settle for less.
Believe in yourself
No matter what you choose.
Keep a winning attitude
And you can never lose.

Think about your destination
But don't worry if you stray
Because the most important thing
Is what you've learned along the way.
Take all that you've become
To be all that you can be.
Soar above the clouds
And let your dreams set you free.

INVOLVEMENT

MAKES YOU

IMPORTANT

முயல் தூங்கும்
முயல் – ஆமைக் கதையில்
வேண்டுமானால்
ஆமை ஜெயிக்கலாம்.

முயலாமல் தூங்கும் – நம்
முயலாமையில் எதையும்
ஜெயிக்க முடியாது.

முயல், முயல்
வெற்றி வேண்டுமெனில்
முயல் !

# கடன்

உலகத்தில் மனிதனுக்கு வந்திருக்கிற நோய்களில் மிகவும் கொடூரமானது எது தெரியுமா? நிச்சயமாக கேன்சரோ அல்லது மற்றதோ அல்ல. **கடன் !** இந்த மூன்றெழுத்து கொண்ட விஷக் கிருமியால் மனிதனுக்கு ஏற்படுகின்ற மனமாற்றம் இருக்கிறதே, அதுதான் மிகவும் கொடூரமான நோய்.

**கடன் என்பது ஒரு**
**அடித்தளமில்லாத கடல்.**

# PLASTIC வாசனை

ஒரு ரயில் பயணத்தில்
தேநீர் குடித்த கோப்பையிலிருந்து
பிறந்தது
இந்த பிளாஸ்டிக் கவிதை

அதிகாலையில்
வாசலில் வந்து விழுந்து
பால்காரனின்
குரலெடுத்துப் பேசியது
பால் நிறைந்த
ஒரு பிளாஸ்டிக் பை

தோட்டம் இல்லாத வீட்டில்
மின்விசிறிக் காற்றில்
தலையசைத்தது
பூச்செடியைப் போலவே
பிளாஸ்டிக்

சிறகுகளின்
அர்த்தம் சிதைந்து
வீட்டுக்குள் பதுங்கி வாழ்கின்றன
பட்டாம்பூச்சிகளாய்
பச்சைக்கிளிகளாய்
பிளாஸ்டிக்

காய்கறி மளிகை என்று
வேலைக்காரியின் கைகளோடு
வீட்டுக்குள் நுழைகின்றன
நான்கைந்து பிளாஸ்டிக் பைகள்

குழந்தைகளின்
உணவுச் சட்டி
தண்ணீர்க்குவளை
எல்லாம் பிளாஸ்டிக்

பெண்களுக்கு
ஸ்டிக்கர் பொட்டுகள்

சாமிகளுக்கு
ஸ்டிக்கர் கோலங்கள்

மூச்சு முட்டும்
பிளாஸ்டிக் வாசனையில்
மண்வாசம் அறியாமலேயே
முடிந்துவிட்டதுதான்
இந்தக் கவிதையின்
துரதிர்ஷ்டம்.

# அம்மாவுக்கு சொல்லவேண்டிய ஸ்ரார்த்த மந்திரம்

குஜராத்தில் ஒரு கயா உள்ளது. * இதை மாத்ரு கயா என்பார்கள். இது பெற்ற தாயாருக்கு மட்டும் ஸ்ரார்த்தம் செய்யும் இடம்.

அம்மாவுக்கு சொல்லும் ஸ்ரார்த்த மந்திரத்தின் விளக்கத்தை ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்கள் கூறுகின்றார்கள்:

''தாயே, என்னைக் கருவில் ஏற்றபோது நீ உடம்பு வேதனை பட்டிருப்பாயே.... அதற்காக இந்த ஜலதர்ப்பணம் செய்கிறேன். நான் கருவில் உருவாகி வளர்ந்தபோது நீ வாந்தி எடுத்து உணவு செரிக்காமல் அவஸ்தைப்பட்டிருப்பாயே.....அதற்காக இந்த ஜலதர்ப்பணம் செய்கிறேன். தாயே, என்னை வளர்ப்பதற்காக நீ விரும்பாத எல்லா உணவையும் என் பொருட்டே எடுத்துக் கொண்டாயே....அதற்காக இந்த ஜலதர்ப்பணம் செய்கிறேன். தாயே.... நான் உன் வயிற்றில் வளர்ந்துவரும் நேரத்தில் உன்னால் சுமக்கமுடியாமல் பெருமூச்சுவிட்டு இங்கும் அங்கும் அலைந்தாயே.... அந்த வேதனைக்காக ஜலதர்ப்பணம் செய்கிறேன். நீ போக வேண்டிய இடங்களுக்குப் போகவிடாமல், நான் போனால் எனக்குக் கடினம் என்று சொல்லி, வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கிடந்து எல்லா ஆசைகளையும் துறந்து விட்டு என் மீதே கவனமாக இருந்தாயே... அதற்காக இந்த ஜலதர்ப்பணம் செய்கிறேன். நான் வெளியே உருவெடுத்து வந்தபோது உன்னுடைய உதிரம் பெருக்கெடுத்து ஓடியிருக்குமே....அதற்காக நான் ஜலதர்ப்பணம் செய்கிறேன். பிரசவ வலியில் அலறி இருப்பாயே....அதற்காக ஜலதர்ப்பணம் செய்கிறேன். நான் வாயால் கடித்து உறிஞ்சியபோது உன் மார்க்காம்புகள் வலித்திருக்குமே...அதற்காக இந்த ஜலதர்ப்பணம் செய்கிறேன். என் அழுகுரல் கேட்டதும் ஓடோடி வந்து தூக்கினாயே....அதற்காக உனக்கு ஜலதர்ப்பணம் செய்கிறேன். நான் பிறந்த பிறகு எனக்கு பால் கொடுக்க வேண்டுமென்பதற்காக வேண்டாததை விலக்கி, வேண்டியதை மட்டும் உண்டாயே....அதற்காக நான் ஜலதர்ப்பணம் செய்கிறேன். நான் உன் மடியில் மல மூத்திரம் செய்தேனே... அந்த துர்வாசனை வேதனைகளை பொறுத்துக்கொண்டாயே....நான் இரவிலே அழுது, மற்றவர்கள் ஏச, நீ எழுந்து என்னைச் சமாதானப்படுத்தி மற்றவர்கள் ஏச்சைப் பொறுத்துக் கொண்டாயே...இப்படியாக ஐம்பத்தைந்து விதமான அவஸ்தைகளை பொறுமையோடு ஏற்றுக்கொண்டாயே.... அதற்காக ஜலதர்ப்பணம் செய்கிறேன்''.

*( * பின் பக்கம் பார்க்கவும் )*

## அம்மா

அம்மா என்பது உடம்பல்ல. அம்மா என்பது இந்த உலகத்தை அரவணைத்துக் கொண்டிருக்கிற ஒரு உணர்ச்சி. அம்மா என்பது உலகத்திலுள்ள எல்லாப் பெண்களிடமும் இருக்கின்ற ஒரு சக்தி. அம்மா என்பது மழை பொழிய காத்திருக்கும் குளிர்மேகம். அம்மா என்பது உலகை குளிர்வித்துக் கொண்டிருக்கிற தாவர சக்தி. அம்மா என்பது உலகிலுள்ள அத்தனை உயிர்களையும் தாங்கிக் கொண்டிருக்கிற பூமியின் பலம்.

**பெற்ற தாயை வணங்குவோம்!**
**இறந்தாலும் வணங்குவோம்!**
**இருந்தாலும் வணங்குவோம்!**

## மாத்ரு கயா மற்றும் சிரார்த்தம் செய்ய வேண்டியவை பற்றிய விபரங்கள் :

ஸ்ரீ சரஸ்வதி நதீ தீரத்தை - மாத்ரு கயா என்பார்கள். அதில் விசேஷமாக கருதப்படுவது **''பிந்து ஸரோவர்''** என்ற ஸரஸ்வதி நதி தீரத்தின் கட்டம்.

இந்த பிந்து ஸரோவர் குஜராத் மாநிலத்தில் **ஸித்பூர் ( Siddhpur )** என்ற இடத்தில் உள்ளது. கீழ்க்கண்ட விலாசத்தில் ஹிந்தியிலோ / குஜராத்தியிலோ பேசி கர்மா செய்ய வேண்டிய தேதியையும் குறிப்பிட்டு டெலிபோனிலோ, தபால் மூலமாகவோ முன் ஏற்பாடுகள் செய்து கொள்ளலாம். அஹமதாபாத்திலிருந்து ஸித்பூர் ***110கி.மீ.*** (SH41) ***தொலைவில் உள்ளது.*** 3 மணிநேரம் பஸ்ஸில் பிரயாணம். அஹமதாபாத்திலிருந்து அபுரோடு போகும் ரயில் வண்டியில் ஏறி பாலன்பூரில் இறங்கி ஸித்பூர் போகலாம். ( பாலன்பூரிலிருந்து ஸித்பூர் 22 கிலோ மீட்டர் ). ஸித்பூரி***லும் ரயில்நிலையம்உள்ளது. இங்கு பாசஞ்சர் ரயில் நிற்கும்.***

## *SIDDHPUR CONTACT ADDRESS :*

**SHRI. VINU BHAI MODI (MANAGER) CELL : 092281 -10469**

SIDHPUR SRI GOPALKRISHNA SAMASKRITHA MAHAVIDHYALAYA

NEAR THE BRIDGE

BINDU SAROVAR MARG. SIDHPUR - 384 151

( NORTH GUJARAT )

TELEPHONE : 02767- 223277

இவர்கள் மூலம் வைதீக கர்மாக்களுக்கான புரோகிதர்களை நியமனம் செய்து கொள்ளலாம். நேராகவும் போகலாம்.

1. சிரார்த்தம் அல்லது விதி ஒன்றுக்கு - இரண்டு 8 முழம் வேஷ்டி, அங்க வஸ்திரம்
2. சுமங்கலி பிரார்த்தனைக்காக - ஒரு 6 கெஜம் புடவை / வேஷ்டி, புடவை கொண்டு செல்ல வேண்டும்.

இதுதவிர பிராமணர்கள் சாப்பாடு ***& கட்டணம் ஆகியவை ரூ. 190ம்*** தட்சணை சுமார் ரூ. 1000/ வரை***யும்*** செலவாகலாம்.

SWAMIYE

# SARANAM AYYAPPA

## வழித்துணையாக வரவேண்டும் பகவானே !

# சரணம் ஐயப்பா

# LEADER

**" THE FINAL TEST OF A LEADER IS THAT HE LEAVES BEHIND HIM IN OTHER MEN THE CONVICTION AND THE WILL TO CARRY ON. "**

# THE STOP TOOL

One tool to manage time that I often recommend is the STOP tool. Outlined by Timothy Gallwey, it's an acronym for Step back, Think, Organise your thoughts, Proceed.

| | | |
|---|---|---|
| Step back | : | Before you start your day or a new part of it or any new task, step back. Detach yourself from your surroundings and centre yourself. |
| Think | : | What is the priority here ? What am I trying to accomplish ? What do I really want ? Is the purpose being served? Will this take me closer to any goals ? |
| Organise your thoughts | : | Map out a plan of action and a schedule to do it in. |
| Proceed | : | Just do it. |

There will be interruptions, distractions, you may forget what you wanted to achieve. During lunchtime, again take a STOP. In the evening, again use STOP to measure what you've achieved and to plan how you can do better the next day.

If you use the STOP tool every single day, your management of time and consequently your leverage can't help but improve.

*In certain Zen monasteries a bell is rung at random intervals. Whenever the bell is rung, everyone in the monastery is required to stop whatever they're doing and maintain absolute stillness and silence for two minutes. Initially, visitors find it extremely irritating and difficult to just stop in the middle of an activity. But gradually they realise how much more centred, peaceful and purposeful they get when they pause during the day or in the midst of a task.*

Use STOP at the beginning and end of every task you take up. It will help you to clarify whether you really need to do the task, if you do, why it is important, what you'll get out of it, how you should approach it, and at the end of it, how could you have done it better ?

The STOP tool is like the brakes on a fast car. The fastest car in the world is of no use if it doesn't have brakes. Without them you can never really control the speed and direction.